www.padippakam.com

20.5.86.

<u>தோழர்களுக்கு:</u>

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழீழ விடுதலை இயக்கத்திற்குமிடையேயான மோதல் தொடர்பாக எம்மால் 10.5.86இல் விடுக்கப்பட்ட பத்திரிகைச் செய்தியையும்,

திரு. ஜெயபாலன் கொடுத்த அறிக்கையென பல செய்தித் தாள்களில் வெளிவந்த அறிக்கைக்கு எம்மால் விடுக்கப்பட்ட மறுப்பும் கீழ் தரப்பட்டுள்ளது. தேவையை ஒட்டி பயன்படுத்துக:

1. 10.5.86 பத்திரிகைச் செய்தி, செயலதிபர் தோழர் முகுந்தனினால் விடுக்கப்பட்டது.

10.5.86.

பதிப்பாசிரியர்.

அன்புடையீர்!

<u>பத்திரிகைச் செய்தி</u>

தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ.) மற்றும் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆகிய இரு இயக்கங்களுக்கிடையிலான பிணக்குகள் உச்சகட்டத்தையடைந்து துப்பாக்கிப் பிரயோகம் வரை சென்ற துயர் சம்பவம் ஆனது நடந்திருக்க கூடாத ஒன்றேயாகும். இச்சம்பவத்தையிட்டு தமிழீழ விடுதலையில் அக்கறை கொண்ட எவரும் கவலை கொள்ளாதிருக்க முடியாது.

இவ்விரு இயக்கங்களுமே நட்புச்சக்திகளேயன்றி பகைச் சக்திகளில்லை என்றும் மோதல்களைத் தவிர்த்து பிரச்சனைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்வதே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் சக்தியைத் தரக்கூடியதாக அமையும் எனவும் "தமிழீழத்தின் குரல்" வானொலி மூலம் கடந்த 2.5.86 அன்று எமது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

எனினும் தவிர்த்திருக்க வேண்டிய இந்தத் 'துப்பாக்கிப் போர்' நடந்துவிட்டதையிட்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் துயரமும் வேதனையும் அடைகின்றது. இவ்வித நடவடிக்கைகள் எமது மக்களுக்கான விடுதலையை முன்னெடுக்காது மாறாக முட்டுக்கட்டைகளையே ஏற்படுத்துவதாயிருக்கும். போராளிகள் போராட்டத்தைத் தமது சொந்தக் கரங்களில் எடுக்காத நிலைமையும், குறைந்த பட்சம் ஒரு வேலைத்திட்டமில்லாத கூட்டுக்களையோ இணைப்புக்களையோ மேற்கொள்வதும் கொள்கைத் தெளிவற்றவர்களிடையே கசப்பை ஏற்படுத்தி இவ்வித மோதல்களுக்கு இட்டுச் செல்வது தவிர்க்கமுடியாததாகவே அமையும். ஆனால் இனி எதிர்காலத்திலாவது இவ்வித மோதல்கள் ஒருபோதும் நிகழக்கூடாது என்றே நாம் வேண்டுகிறோம்.

இந்த 'யுத்தத்தில்' தமிழீழ விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்து போராட வந்த நூற்றுக் கணக்கான அப்பாவி போராளிகள் உயிரிழக்க நேர்ந்ததும் நம் அனைவருக்கும் ஈடிணையற்ற இழப்பையே ஏற்படுத்தியுள்ளது. இந்த உயிரிழப்புகளைத் தவிர்த்திருக்கக்கூடிய கடமை புறக்கணிக்கப்பட்டது எப்படி என்பது ஒரு புதிராகவே விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இயக்கங்கள் நேச முரண்பாடுகளைப் பகை முரண்பாடுகளாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளையும் கண்டிக்கத்தக்கதே.

இந்த மோதலில் உயிரிழந்த அனைத்துத் தோழர்களுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு அவர் தம் குடும்பத்தவர்களுக்கும், உறவினர்களுக்கும், ஊரவர்களுக்கும், இயக்கங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

எதிர்காலத்தில் இயக்கங்களுக்கிடையிலான பிணக்குகளைத் தவிர்க்கும்படியும், எழும் பிரச்சனைகளை சுமூகமாகத் தீர்த்துக் கொள்ளும்படியும் தமிழீழ மக்களின் நலனையும் எதிர்பார்ப்புகளையும் முதன்மைப்படுத்தி ஒரு வேலைத்திட்டத்தை வகுக்க வேண்டும் எனவும், முற்போக்கான

படிப்பகம்

www.padippakam.com



பாதையிலேயே முன்செல்ல வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

ஒப்பம்
( க.முகுந்தன். )
செயலதிபர்.

2. 15.5.86இல் திரு. ஜெயபாலன் அறிக்கைக்கு, மறுப்பு அறிக்கை அரசியல் செயலர் தோழர் வாசுதேவனால் விடுக்கப்பட்டது.

15.5.86.

பதிப்பாசிரியர்,

அன்புடையீர்!

<u>பத்திரிகைச் செய்தி</u>

முதலாவதாக திரு. ஜெயபாலன் இப்படியொரு அபாண்டமான குற்றச்சாட்டை முன்வைத்தாரா, முன்வைக்க முடியுமா என்ற ஆச்சரியம் எழுந்தாலும் இதை நாம் மிக வன்மையாக மறுக்கின்றோம்! கண்டிக்கின்றோம்! ஆச்சரியத்திற்குக் காரணம் திரு. ஜெயபாலன் எங்கள் இயக்கத்தில் இருக்கும் வரை "நல்ல பிள்ளை"யாகவே இருந்தார் என்பதும், பல காரசாரமான விவாதங்கள், விமர்சனங்களைக் கூட முன்னின்று நடத்தியிருக்கிறார் என்பதும், "பிற்போக்குச் சக்திகளின் சதி வலைக்குள் நாம் தவறி விழுந்துவிடக்கூடாது" என்று அப்போதெல்லாம் ஆவேசமாக ஆழுரைத்துள்ளார் என்பதுவேயாகும்.

இரண்டாவதாக எமது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் அரசியல் ஆலோசகராக இருந்ததாகத் தனக்குத் தானே முடிசூட்டிக் கொள்ளும் திரு. ஜெயபாலன் அவர்கள் அரசியல் ரீதியாக எங்கள் மீது எந்தக் குற்றச்சாட்டையும் வைக்கவில்லையென்பதும் கருத்தியல் ரீதியாக நாம் தவறானவர்கள் என்ற குற்றச்சாட்டை அவரால் வைக்க முடியவில்லை என்பதுமாகும்.

அடுத்து திரு. ஜெயபாலன் எமது கழகத்தில் இருந்து வெளியேறினார் என்பது, ஆம் தன்னை "அரசியல் ஆலோசகர்" எனக் கூறிக்கொள்ளும் இவர் கழகத்துக்கு அறிவிக்காமலே அல்லது எவரிடமும் சொல்லிக் கொள்ளாமலே ஊதாரிப் பையனைப் போல ஓடிவிட்டார் என்பது உண்மைதான். இது நடந்தது ஏழு மாதங்களுக்கு முன் 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆகும். அவர் வெளியேறிவிட்டார், என்று அறிய நேர்ந்தபோது அதைப் பற்றி நாம் ஒரு அறிக்கைவிடவில்லை திரு. ஜெயபாலன் வெளியேற்றம் ஒரு பெரிய விடயமல்லவென்பதாலும், வெளியேறுவது அவரது சுயவிருப்பம் அதைக் கட்டுப்படுத்த எமக்குரிமையில்லை என்பதாலும்தான். வெளியேறிய போது அரசியல் ஆலோசகர் எனக் கூறிக்கொள்ளும் அவரும் ஒரு தன்னிலை விளக்கமாக ஒரு அறிக்கைவிட யோசிக்கவோ, முயற்சிக்கவோ இல்லை. ஆனால் ஏழு மாதங்களுக்கு பிறகு தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கும் கட்டத்தில் எம்மீது குற்றஞ்சாட்ட வேண்டுமென்ற அரசியல் ஞானோதயம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

எனவே இன்று இதைச் செய்ய வேண்டிய ஒரு 'தேவை' அவருக்கு ஏற்பட்டுவிட்டது என்பதை

படிப்பகம்

www.padippakam.com



அவரது குற்றச்சாட்டுக்களை எடுத்துக் கொண்டால்:-

1. உமாமகேஸ்வரனும், தளபதி முகுந்தனும் ஆகிய இருவரும் சுவிஸ் பாங்குகளில் தமது சொந்தப் பெயர்களில் டெபாசிட் செய்துள்ளார் என்கிறார். நாம் மிக வன்மையாக மறுக்கின்ற இந்த அபாண்டமான பிரசாரத்தை செய்ய முன்வந்துவிட்ட திரு. ஜெயபாலனுக்கு உமாமகேஸ்வரன், முகுந்தன் ஆகிய இரு பெயர்களுமே ஒருவருடையதுதான் என்ற நிதானம்கூட இல்லாமற் போனது ஆச்சரியம் தான். ஒரு குற்றச்சாட்டை சொல்லும்போது அது ஆதாரபூர்வமாக இருக்க வேண்டும் என்பதுகூட தெரியாதவர் எப்படி அரசியல் ஆலோசகராக இருந்திருக்க முடியும்?
2. பெங்களூர் திருச்சூரில் நடந்த கொள்ளைகளுக்கு பிளாட் தான் பொறுப்பு என்பது முற்றிலும் தவறானது.
3. தன்னைக் கடத்திச் சென்று கொலை செய்ய முயற்சிக்கப்பட்டது என்பது இவரது கற்பனையின் உச்சமாகும்.
4. 285 பேர் கொல்லப்பட்டார்கள், தஞ்சாவூரில் பிணங்கள் எரிக்கப்பட்டன என்பனவெல்லாம் ஏற்கனவே எமது அரசியல் எதிரிகளான சில ஏஜென்டுகள் கட்டிவிட்ட கதைகள் தான். இப்போது திரு. ஜெயபாலனும் இவற்றையே கூறுகிறார்.

இவையெல்லாம் பொய் என்றால் அவர் இப்படிச் சொல்லுகிறார் என்ற கேள்வி எழலாம்.

திரு. ஜெயபாலன் கொள்கைப் பற்றுடன் எந்தக் காலத்திலும் எந்தவொரு இயக்கத்துடனும் தன்னை உறுதியாகப் பிணைத்துக் கொண்டவரல்ல. ஒரே சமயத்தில் பல தோணிகளில் பயணம் செய்ய விரும்புபவர். கழகத்திலேயே அவர் ஒரு இலாகாவில் உறுதியாக இருந்து கடமை யாற்றும் விருப்பமற்றவராகவே இருந்ததுண்டு. ஆடு அங்கொன்றும், இங்கொன்றுமாக இலைகளைக் கடித்துக் கொண்டு திரிவதைப் போல எல்லா இலாக்காக்களிலும் தனது தலையை நுழைக்க அனுமதிக்க வேண்டும் என்ற 'பண்பு' அவருக்கு எப்போதுமே உண்டு. இதை நாம் அனுமதிக்காத தன் விளைவுதான் இவர் கழகத்தைவிட்டு ஒதுங்குவதற்கு காரணமாகவிருந்தது. இதற்கெல்லாம் அவரிடம் உள்நோக்கங்களும் அதை அடையமுடியாத விரக்திகளும் காரணமாயிருக்கலாம். அவற்றை விமர்சிப்பது அழகல்ல.

ஆனால் போராட்டத்தில் நெருக்கடியான இன்றைய காலகட்டத்தில் இப்படி சேற்றை வாரி இறைப்பது என்பதை எழுந்தமான நிகழ்ச்சியாகவோ, தற்செயலானதாகவோ பார்க்க முடியவில்லை. ஆழமான அரசியல் நோக்கம் கொண்டதாகவே இருக்கிறது. ஜெயபாலனுக்கு தனிப்பட்ட சில குரோத உணர்வுகள் இப்போது கைகொடுக்கிறது. சில பிற்போக்குவாத சமூக விரோத சக்திகள் ஜெயபாலனை இலகுவாக கையாளுகின்றன என்பதே இதிலிருந்து புரிகிறது.

ஒப்பம்.
இரா. வாசுதேவன்.
(அரசியல் செயலர்.)

படிப்பகம்